No. of Printed Pages : 5

2024

**7839**

பதிவு எண் | | | | | | | |

முதலாம் ஆண்டு

100622

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

## பிரிவு - அ

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **10x2=20**

**1.** தேனடை, பாலாடை - சொற்களைப் பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி தருக.

**2.** கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக.

- அடிக்கோடிட்ட சொல்லைப் பிரித்து, விதியுடன் விளக்கி எழுதுக.

**3.** பலவணி, மாவிலை, சேவடி - சொற்களைப் பிரித்து எழுதுக.

**4.** யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்

சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(அ) அடிக்கோடிட்டச் சொற்களைப் பிரித்தெழுதுக.

(ஆ) நாகாக்க, சோகாப்பர் - இவற்றின் பொருளை எழுதுக.

**5.** கீழ்க்காணும் தொடர்களில், விடுபட்ட இடங்களில் உரிய அடுக்குத்தொடர்களை எழுதுக.

(அ) என் வீட்டிற்கு வந்த நண்பனை ________ ________ என வரவேற்றேன்.

(ஆ) பேருந்தின் படியில் நின்ற பயணிகளை நடத்துனர் ________ ________ என்றார்.

[ திருப்புக

6. தொழிற்பெயரின் வகைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

7. 'மக்கள்' என்னும் பெயர்ச்சொல்லின் பண்புகளை எழுதுக.

8. 'மதுரை என்ன விலை ?' - எவ்வகை ஆகுபெயர் ? விளக்கம் தருக.

9. கீழ்க்காணும் உரைப்பகுதியிலுள்ள ஒற்றுப் பிழைகளை நீக்கி எழுதுக.

கவின் கடைக்கு சென்றான். அம்மாக் கூறிய பொருள்களை வாங்கினான். அதற்கானப் பணத்தை கொடுத்தான். வீட்டிற்குத் திரும்பினான்.

10. கட்டுரையின் அமைப்பினை எழுதுக.

## பிரிவு - ஆ

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **5x4=**

11. பண்புப் பெயர் புணர்ச்சிக்கான விதியினை எழுதி, இரு எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

12. கீழ்க்காணும் உரைப்பத்தியின் மையக்கருத்தையும் அருஞ்சொற்களையும் எழுதுக.

தமிழ்நாட்டு மலையும் நதியும் இன்றைய இயற்கைப் பொருள்களும் அவர் தேவாரப் பாட்டிலே படமெடுத்துக் காட்டப்படுகின்றன. மந்த மாருதம் வந்துலாவும் திருக்குற்றால மலையில் வாழும் மந்தியினை அவர் பாடலில் காணலாம். காமர் மாலை அருகசைய நடந்து செல்லும் காவேரியாற்றின் அழகினை அவர் பாட்டில் காணலாம். இன்னும் கண்ணுக்கினிய நிறமும் காதுக்கினிய மொழியும் வாய்ந்த கிளிகளைக் காணலாம். சோலையிலே பறந்து திரியும் கிளியை நோக்கி அவர் பேசும் முறையினைக் காண்போம் :

'இளங்கிளியே! இங்கே வா;! பாலும் தேனும் கலந்து உனக்குப் பருகத் தருவேன். நீ உனது இனிய மொழியால் எனது ஈசன் திருநாமத்தை ஒருமுறை பேசாயோ ?' என்று திருஞானசம்பந்தர் வேண்டுகின்றார்.

13. கீழ்க்காணும் உரையாடலைச் செய்தியாக்குக.

| | | |
|---|---|---|
| பூவிழி | : | மதி! நலமாக இருக்கிறாயா ? |
| மதி | : | ஓ! நலமாக இருக்கிறேனே. விடுமுறையை எப்படிக் கழித்தாய் ? எங்கேயாவது வெளியூருக்குச் சென்றாயா ? |
| பூவிழி | : | ஆமாம் மதி. என் மாமாவின் திருமணம் சென்னையில் நடைபெற்றது. நான் அங்குச் சென்றேன். |
| மதி | : | அப்படியா! சென்னையில் கண்டுகளிக்க நிறைய இடங்கள் இருக்கிறதே! நீ எங்கெல்லாம் சென்றாய் ? அதைப் பற்றிச் சொல். |
| பூவிழி | : | சென்னை நம் ஊர்போல் இல்லை மதி. மிக உயரமான அடுக்குமாடி கட்டடங்கள், மெரினா கடற்கரை, மிகப் பெரிய அண்ணா நூற்றாண்டு நூலகம், தகவல் தொழில்நுட்ப பூங்கா, உயிர்க்காட்சி சாலை, விமான நிலையம் என எல்லாம் புதுமையிலும் புதுமையாக இருந்தன. |

14. 'கல்வியெனும் செல்வம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுத, ஏற்ற பக்கத் தலைப்புகளும் மேற்கோள்களும் தருக.

15. வழுவமைதியின் வகைகளை எழுதி, இரண்டினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

16. கீழ்க்காணும் பாடலில் தடித்த அடிகளை உரைநடைப்படுத்திக் கூறுக.

**"எங்கும் பாரடா இப்புவி மக்களை**
**பாரடா உனது மானிடப் பரப்பை!**
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
'என் குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவு செய்; அகண்ட மாக்கு!
**விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை**
அணைந்து கொள்! உன்னைச் சங்கமம் ஆக்கு!
**மானிடச் சமுத்திரம் நானென்று கூவு!**
பிரிவிலை எங்கும் பேதம் இல்லை."

**- பாரதிதாசன்.**

17. பொற்றொடி வந்தாள் - இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொகையினை விளக்குக.

18. மூன்றாம் வேற்றுமை உருபையும் பொருளையும் எழுதி, எடுத்துக்காட்டுத் தருக.

[ திருப்புக

## பகுதி - II

## பிரிவு - அ

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **10x2=20**

19. மொழி பழகுதல் என்றால் என்ன ?

20. ஒரு மொழி, மக்களின் அடையாளமாகத் திகழ்வது எவ்வாறு ?

21. மொழித் திறன்களை வகைப்படுத்துக.

22. மாணவர்களிடம் கேட்டல் திறனை வளர்க்க எவ்வகையான குழுச் செயல்களை வழங்கலாம் ?

23. கீழ்க்காணும் பாடலின் பொருள் நயத்தை எழுதுக.

    ''நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
    ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா - வேற்படையும்
    வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
    ஆளுமே பெண்மை யரசு.''

    **- நளவெண்பா.**

24. செயல்திட்ட முறையில் செயலை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் ?

25. அகராதி என்றால் என்ன ? உனக்குத் தெரிந்த இரண்டு தமிழ் அகராதியின் பெயரை எழுதுக.

26. ஒரு பாடத்தைக் கற்பிக்க ஏன் திட்டமிட வேண்டும் ?

27. கற்பித்தல் குறிப்பு பற்றி எழுதுக.

28. எதிர்பார்க்கப்படும் கற்றல் வெளிப்பாடுகள் என்றால் என்ன ?

## பிரிவு - ஆ

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **5x4=20**

**29.** மொழியின் இயல்புகளை விளக்கமாக எழுதுக.

**30.** எழுத்துத் தமிழை மாணவர்களுக்கு எவ்வாறு அறிமுகப்படுத்துவாய் ?

**31.** நாநெகிழ் பயிற்சி, நா பிறழ் பயிற்சிக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.

**32.** படித்தலை விரைவாக்கும் வழிமுறைகளைக் கூறுக.

**33.** 'மொழிப் பாடத்தின் வாயிலாக மாணவர்களிடம் பண்பாட்டினை வளர்க்க இயலும்.' - இக்கூற்றினை இரு எடுத்துக்காட்டுகளுடன் நிறுவுக.

**34.** பல்வகுப்புக் கற்பித்தலிலுள்ள இடர்ப்பாடுகள் யாவை ?

**35.** சிறந்த பாடங் கற்பிப்புத் திட்டத்தின் பண்புகளைக் கூறுக.

**36.** ஒரு மொழி ஆசிரியர் அகராதிகளை ஏன் பயன்படுத்த வேண்டும் ?

## பகுதி - III

**குறிப்பு : ஒவ்வொரு வினாவிற்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **2x10=20**

**37.** (அ) படித்தலின் வகைகளை நிறை, குறைகளுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) இலக்கணம் கற்பித்தலின் நோக்கங்களையும் வகைகளையும் விளக்கி எழுதுக.

**38.** (அ) மொழிப் பாடத்தைக் கற்பிக்க என்னென்ன கற்றல் பொருள்களைத் தயாரித்துப் பயன்படுத்துவாய் என்பதை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) ஐந்தாம் வகுப்பிற்கு, மாதிரி பாடங் கற்பிப்புத் திட்டம் ஒன்றினை எழுதுக.

-oOo-